**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.226/2024 - PW-6**

| | |
|---|---|
| Name | திரு. பாலசுப்ரமணியம் |
| Husband/Father Name | சேஷா |
| Village /Area | புன்னை |
| Taluk | நெமிலி |
| Occupation | மதுபான கடை விற்பனையாளர் |
| Age | 49 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 22.09.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 30.01.2024 அன்று இரவு சுமார் 7.00 மணியளவில் நானும் சேல்ஸ் மேன் சிவகுமாரும் புன்னை மதுபான கடை எண்.11018 பணியிலிருந்த போது சிவகுமார் என்பவர் விற்பனை செய்து கொண்டிருந்தார். நான் கணக்கு பார்த்து கொண்டிருந்தேன். அப்போது எங்களுடன் பணிபுரியும் உதவியார் பாபு என்பவர் சிறுநீர் கழிப்பதற்காக கடையிலிருந்து வெளியே சென்றார். அப்போது மாலை 7.00 மணியளவில் நாங்கள் பணிபுரிந்து கொண்டிருந்த கடையில் சேல்ஸ் மேன் சிவகுமாரிடம் மாஸ்க் அணிதிருந்த ஒரு நபர் ஒரு பீர் பாட்டிலை கொடு என்று கேட்டார். அதற்கு சேல்ஸ் மேன் சிவகுமார் பணம் கொடு என்று கேட்டார். அப்போது சத்தம் கேட்டது. நான் வந்து பார்த்த போது கடையிலிருந்து ஒரு நபர் அடடை பெட்டியிலிருந்து வைத்திருந்த பணத்தை எடுத்துக் கொண்டு ஓடினார். அப்போது சிறுநீர் கழிக்க சென்ற

பாபுவும் வந்தார். நானும் பாபுவுடன் சேர்ந்து பணத்தை எடுத்துக் கொண்டு சென்ற நபரை பின் தொடர்ந்து சென்றோம். அப்போது அவர் ரோட்டில் தயாராக நிறுத்தி வைத்திருந்த இரு சக்கர வாகனத்தில் இரண்டு நபர்களுடன் ஏறி பானாவரம் வழியாக சென்று விட்டார். சம்பவ நேரம் இரவு இருட்டாக இருந்ததால் வாகனத்தின் எண் தெரியவில்லை. பிறகு நான் சூப்பர்வைசர் சந்திரசேகருக்கு போன் மூலம் தகவல் கூறினேன். பிறகு நெமிலி காவல் நிலையத்துக்கு சென்று புகார் கொடுத்தோம். மேலும் மதுபானக் கடையிலிருந்து எடுத்து செல்லப்பட்ட பணம் ரூ.42,360/- எனத் தெரியவந்தது. இது சம்மந்தமாக நெமிலி போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

30.01.2024 அன்று இரவு 7.00 முதல் 7.10 மணியளவில் நடைபெற்றது. அப்போது நானும் சிவகுமாரும் உதவியாளர் பாபுவும் கடையில் இருந்தோம். அப்போது முகமூடி அணிந்த நபர் ஒருவர் கடைக்குள் வந்தார். அவர் யார் என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்தது உண்மை தான் ஆனால் ஆஜர் எதிரிகள் தான் சம்பவதன்று கடைக்கு வந்தார்களா என்று எனக்கு தெரியாது.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.09.23 18:12:57 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.